# வெலிகம பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 15 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையகத்தின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முணைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, வெலிகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

பின்வரும் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 100,000 தொகை பெறுமதியான 02 காணிகள் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருக்காததுடன், தெனிப்பிட்டிய பிரசவ வீடு மற்றும் முதுகமுவ பிரசவ விடுதி மற்றும் மிதீகம பொதுச் சந்தைக் கட்டிடத்தினை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

(ஆ) ரூபா 84,000 பெறுமதியுடைய 04 சேதமடைந்த குப்பை வண்டிகளை சொத்துக்களில் இருந்து அகற்றியிருக்கவில்லை.

(இ) கடந்த ஆண்டுகளில் நன்கொடையாக கிடைத்திருந்த டெபோ டிரக்டர் மற்றும் 02 டிரெய்லர்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) விளம்பரப் பலகை கட்டண வருமானமாக கிடைத்திருந்த ரூபா 162,600 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) குப்பைக் கட்டண வருமானமாக கிடைக்க வேண்டிய ரூபா 172,250 தொகையின் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) 03 நிர்மாண வேலைகள் தொடர்பாக கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்களுக்காக ஏற்பாடுகள் ரூபா 55,600 மிகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(எ) கூட்டுத்தொகை ரூபா 60,213 தொகைக்காக இருப்பின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ஏ) வெலிகம பிரதேச செயலகத்தினால் 2006 நவம்பர் 27 ஆம் திகதி வெலிகம பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த மிதீகம துருக்கி வீடமைப்பு திட்டத்தின் வர்த்தக

தொடர்கட்டிடம் மற்றும் பொதுக் கட்டிடம் மற்றும் மேலும் 03 கட்டிடங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**1.3.2 எதிர் பாராத பொறுப்புக்கள்**

சபைக்குச் சொந்தமான துருக்கி கடைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 1,249,476 தொடர்பாக பிரதேச சபைக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 5,648,615 தொகைக்கான பலவின கடன்பற்றோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 2,422,380 தொகைக்கான மீதியொன்று அடங்கியிருந்தன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 11,067,337 தொகைக்கான நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதியில், 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 2,932,956 தொகைக்கான மீதியொன்று அடங்கியிருந்தது.

(ii) முன்னைய ஆண்டிற்கு முன்னர் இருந்து முன்கொண்டு வந்து காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 724,919 தொகைக்கான பெறுமதி கூட்டியவரி வைப்பு மீதியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 84,165,745 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 146(1) | 1998 ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக வீதவரி செலுத்தும் 3585 இற்கான ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து புதிய பெறுமதி மதிப்பீட்டின் பெறுமதியின் கீழ் வீதவரி அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை(நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பாக அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் ஏழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. |
| (ii) விதி 196 | நுகர்வுப் பொருட்களை பதிவேடு, பொறுப்பு வாய்ந்த எழுதுனர் ஒருவரின் பொறுப்பில் வைத்து ஒவ்வொரு பண்ட வழங்குதல் தொடர்பாகவும் முழுமையான குறிப்பு ஒன்று பதிவேட்டின் பதிந்திருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 189 | ரூபா 21,197 தொகை பெறுமதியான மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 63,645,269 தொகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 56,379,299 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி | 4,590,500 | 5,496,311 | 5,362,681 | 1,302,663 | 4,816,500 | 3,835,071 | 3,744,438 | 1,169,033 |
| வாடகை | 3,657,500 | 3,066,989 | 2,893,535 | 761,552 | 3,339,700 | 2,890,866 | 3,289,174 | 588,098 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 4,175,500 | 7,809,196 | 6,312,196 | 1,551,150 | 4,128,000 | 6,813,390 | 6,843,890 | 54,150 |
| ஏனைய வருமானங்கள் | 54,370,600 | 61,101,942 | 6,277,797 | 139,035,850 | 42,842,000 | 56,794,948 | 28,821,413 | 84,211,705 |
| மொத்தம் | 66,794,100 | 77,474,438 | 20,846,209 | 142,651,215 | 55,126,200 | 70,334,275 | 42,698,915 | 86,022,986 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 36,297,130 தொகையாக காணப்பட்டதுடன், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 53,597,347 ஆகும். ரூபா 37,469,317 தொகை ஆரம்ப நிலுவையுடன் ரூபா 91,066,664 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 42,790,049 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 48,276,615 தொகை ஆக இருந்தது.

**2.2.3 வீதவரியும் வரியும்**

**(அ) வீதவரி**

ஆரம்ப நிலுவை ரூபா 1,039,112 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 290,576 தொகையான ஆண்டிற்கான சிட்டை இடல் உடன் ரூபா 1,329,688 தொகை அறவிட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 137,279 தொகையை காணப்பட்டமையால் வருட இறுதிகள் உள்ளவாறு நிலுவை ரூபா 1,192,409 தொகை காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர்வரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 129,921 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 11,075 தொகையுடன் ரூபா 140,996 தொகை அறவிடப்பட வேண்டி காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 30,742 தொகையாக காணப்படாமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 110,254 தொகை நிலுவையில் காணப்பட்டது.

**2.2.4 வாடகை**

ஆரம்ப நிலுவை ரூபா 588,097 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 3,088,149 தொகையான ஆண்டிற்கான சிட்டை இடல் உடன் ரூபா 3,676,246 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 2,914,695 ஆகக் காணப்படாமையினால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 761,551 தொகை காணப்பட்டது.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 11,693,526 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 125,216,034 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**2.3 மிகை விதிப்பு**

பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு சொல்ல வேண்டிய ஆட்களுக்கு எதிராக என்னால் கடந்த ஆண்டுகளின் போது ரூபா 7,750,286 தொகை பெறுமதியான 10 மிகை விதிப்புக்கள் விதிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மிகை விதிப்புக்களில் ரூபா 7,750,286 இற்கான தொகையொன்று 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்துதலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) ஏற்பாடுகள் ஒதுக்காமை

சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,049,014 தொகைக்கான 02 செய்பணிகளுக்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமையால் அந்த நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்படவில்லை.

#### (ஆ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ள முடியாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பல்வேறு செய்பணிகள் 04 இனை நிறைவேற்றுவதற்காக ரூபா 15,203,774 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்த்த பூர்த்தி செய்ய வேண்டிய மட்டம் (output) இனை அடைந்திருக்கவில்லை.

(ii) மந்திரிமார் ஏற்பாடுகளின் கீழ் 04 செய்பணிகளுக்காக ரூபா 513,000 இற்கான தொகையொன்று கிடைத்திருந்த போதிலும், அந்த நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

#### (இ) எதிர்பார்த்த நலன்களை (output) பெற்றுக் கொள்ளப்படாமை

தேசிய இளைஞர் சேவை சபையின் ஏற்பாடுகளின் கீழ் இரண்டு கட்டங்களாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு முதல் கட்ட வேலைக்காக ரூபா 1,049,844 தொகை செலுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த இரவு பகல் வொலிபோல் விளையாட்டு திடல் 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும் குறிப்பிட்ட விடயத்திற்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை.

#### (ஈ) செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

கம்புறுகமுவ இபிடிமுள்ள பாதையை விசாலமாக்குவதற்காக 2015 ஜூன் மாதத்தில் சபைக்கு வழங்கியிருந்த ரூபா 8,609,646 இற்கான தொகை உரிய நிர்மாண வேலைகளை நிறைவேற்றாமல் நிலையான வைப்பு ஒன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

#### (உ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது குப்பை சேகரிப்பதற்காக ரூபா 11,556,604 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், சேகரிக்கப்படும் குப்பை அதிகார பிரதேசத்தில் தனியார் இடம் ஒன்றில் போடப்பட்டிருந்தது.

(ii) சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 01 ஏக்கர் 01 ரூட் 28 பர்சஸ் அளவான கருவலபத்த எனும் காணி, குப்பை செயற்திட்டதிற்காக கம்புறுகமுவ கடொலான எனப்படும் காணிக்கு ரூபா 2,000,000 தொகைக்கு பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நிலம் கண்டல் மரத்தோப்பு உடனான சுற்றாடல் காணப்பட்டமையால் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்க மறுத்திருப்பதனால் குறிப்பிட்ட காணியின் பறிமாற்றத்தின் மூலம் எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன், குப்பை முகாமைத்துவத்திற்கான வளமும் காணப்படவில்லை.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரழில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 344 சுற்றுலா விடுதிகள் காணப்பட்ட போதிலும், 67 ஹோட்டல்களில் இருந்து மாத்திரம் குப்பை வரி அறவிடப்பட்டிருந்தமையால் ரூபா 255,500 இற்கான வருமானமொன்றினை சபை இழந்துள்ளது.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பதவியணி திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளில் ஒரு வெற்றிடங்கள் மற்றும் 29 ஊழியர் மிகையும் காணப்பட்டது.

(ii) முறையான அங்கீகாரம் இன்றி தற்காலிக / பிரதியீட்டு 03 பதவிகளுக்காத ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

(iii) 2017 ஆண்டின் போது பாதை தொழிலாளர்கள் 04 பேர் மற்றும் சுகாதார தொழிலாளர்கள் ஒருவர், உரிய கடமைகளுக்கு புறமாக அலுவலகத்தில் பல்வேறு கடமைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டு சம்பளமாக ரூபா 2,079,048 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

**3.4.1 வீதி விளக்கு பராமரிப்பு**

சபையினால் வீதி விளக்குகள் பராமரிப்புக்காக ரூபா 828,310 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன், ஆண்டின் போது ரூபா 743,287 தொகைக்காக வீதி விளக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. வீதி விளக்கு தூண்களுக்கு இலக்கங்கள் இடப்பட்டிருக்காமையால் வீதி விளக்குகள் பொருத்துதல் தொடர்பாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது. சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த வீதி விளக்குகளின் எண்ணிக்கையை விட மிகையாக 247 வீதி விளக்கு தூண்கள் பொருத்தப்பட்டிருந்தன.

**3.4.2 ஆதன பெறுமதி மதிப்பீடு உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படாமை**

2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு காணி மற்றும் கட்டிடங்களின் மீதியில் அடங்கியுள்ள 08 ஏக்கர்கள், 26.94 பர்சஸ் இற்கான 51 காணித்துண்டுகளை காணி பெறுமதி மதிப்பீடு செய்து, அவற்றின் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற / குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான ரூபா 7,462,799 தொகைக்கான 03 வாகனங்கள் மற்றும் 02 இயந்திரங்கள் பல வருட காலமாக செயற்படாமல் காணப்படாதுடன் 2015 ஜூலை 10 திகதிய நிதி சுற்றறிக்கையின் இலக்கம் 02/2015 இன் பிரகாரம் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.6 பெறுகைகள்**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

சபையினால் நிறைவேற்றப்படும் சேவைகள் மற்றும் கொள்வனவுத் தொடர்பாக மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**3.6.2 ஒப்பந்த வேலை நிருவாகம்**

04 நிர்மாண வேலைகள் தொடர்பாக 27 கொங்கிரீட் துண்டுக் கற்கள் பரிசோதனை செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 16 கொங்கிரீட் துண்டுகளின் பரிசோதனை அறிக்கைகளை மாத்திரம் கவனம் செலுத்தி ரூபா 3,528,914 இற்கான தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளபடியான வறுமானங்கள் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 08 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 73,188,176 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 16 சதவீதம் முதல் 89 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 04 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 30,485,893 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 16 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**4.2 உள்ளக கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய

தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிதிப் பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் கலந்துரையாடி இருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 ஜூன் 09 திகதி DMA/29(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நிறுவுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்

2015 ஆண்டின் போது உரிய சீராக்கல் மேற்கொள்ளப்படாமல் திரண்ட நிதியக் கணக்காய்விற்கு பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 65,791 தொகைக்கான தொங்கல் கணக்கின் செலவு மீதியை இனங் கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமானம் சேகரித்தல்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு